Registered No. M-4433. Madras War Review (TAMIL) 14-7-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் ஞூ ஜூலை மீ 14உ, வெள்ளிக்கிழமை இதழ் 45

ஜெனரல் மண்ட்காமரி.

சபாஷ் !

போர் கடுமையாக விருந்தது. வெகுவாகச் சாதித்திருக்கிறோம். நமது வெற்றிகள் நிச்சய மானவை; உருவானவை. நார்மண்டியிலுள்ள நேசப் படைகள் பூரண திருப்தியடைய, தகுந்த காரணங்களுண்டு. 54,000 பேர்களை நாம் கைதிக ளாகப் பிடித்திருக்கிறோம். ஜெர்மானியர்களை நாம் தவிடு பொடி செய்தோம். நாம் பலமாக வேரூன் றிக்கொண்டு பாதுகாப்போ டிருக்கிறோம். சபாஷ்! பலே சபாஷ்!

ஜெனரல் மண்ட்காமரி, ஜூன் மாதம் 11-ம் தேதி நார்மண்டிலுள்ள தன் படைகளுக்குச் செய்த ஒலிபரப்புப் பிரசங்கத்தில் கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : ஜெனரல் மண்ட்காமரி ..	1	போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4
சபாஷ் !	1	அக்கிரமச் சேமிப்பும் கொள்ளை லாபமும் ..	5
முரசொலி	2	வெகு சீக்கிரத்தில் நேச தேச வெற்றி	7
இந்த ஆண்டில் வெற்றி	2	ஜெர்மனிக்கு ஆபத்து	9
தலையங்கம் : கெய்ன் வெற்றி	3	யுத்தநாட் குறிப்புக்கள்	12

முரசொலி

பிரான்சிலுள்ள ஜெர்மானியர்கள் அனைவரும் 1944-ம் வருஷக் கடைசிக்குள் கொல்லப்படுவார்கள் ; அல்லது கைதி செய்யப்படுவார்கள் ; அல்லது விரட்டி யடிக்கப் படுவார்கள்.

—ஜெனரல் டிகால், ஜூலை 7-ம் தேதி கூறியது.

இந்த ஆண்டில் வெற்றி

(மதன கோபாலா கண்ணு—என்ற மெட்டு.)

பல்லவி.

போராடுவோ மில்லை வாட்டம்
புறமுதுகு காட்ட மாட்டம்

அனுபல்லவி.

1 மாரோடு குண்டு வந்தாலும் கண்டு
மனங்கலங்காமல் முன்பு செல்வோம்
மறைந்து நில்லாமல் நின்று கொல்வோம் (போ)

2 கோளான நாசி கொடும்பரதேசி
பாளான ஹிட்லர் படை முன்னால்
பங்கம் செய்வோம் வந்து நின்னால் (போ)

3 ஆகாய மார்க்கம் அவன் வரும் நோக்கம்
அறிந்து எதிர்க்கும் நம்மன் கூட்டம்
அதனைக் கண்டா லவர்கள் ஓட்டம் (போ)

4 கயவர்கள்நாடு கைவசமோடு
ஜெயங்கொண் டிடுமிந்த ஆண்டாம்
பயமில்லை சந்தேகம் வேண்டாம் (போ)

N.B.—இவ் வர்ணமெட்டு, பாமா விஜயத்தில் இருக்கிறது.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV　　1944-ம் ௵ ஜூலை ௴ 14உ வெள்ளிக்கிழமை　　இதழ் 45

கெய்ன் வெற்றி

வெற்றிக்கு வழி என்பது பற்றி சென்ற மே விழாவன்று மார்ஷல் ஸ்டாலின் தன் பிரசங்கத்தில் குறிப்பிட்டார். ஜெர்மனியை நாலா பக்கங்களிலும் ஏககாலத்தில் தாக்க வேண்டும் என்பது தான் அவ் வழி. இது தான் டேஹ்ரான் மகா நாட்டின் முடிவுங் கூட. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் படுவதை நாம் இப்போது கண் கூடாகக் காண்கிறோம். நான்கு போர் முனைகளில் நாஜிகள் தாக்கப்படுகிறார்கள். பின்லாந்து, இத்தாலி, பிரான்சு, கீழ்ப் பகுதி ஆகிய நான்கு புரங்களும் ஜெர்மானியர்கள் போராட வேண்டி யிருக்கிறது. அவர்களை வளைந்திருக்கும் இருப்பு வளையம் நாளுக்கு நாள் நெருக்கிக் கொண்டு வருகிறது. என்றாலும் நேசப் படைகள் நெடுந் தூரம் போராடிக் கொண்டு போக வேண்டி யிருக்கிறது. என்றாலும் இது பற்றி சில முக்கியமான சம்பவங்கள் ஊக்க மளிக்கின்றன. முதலாவதாக, மேல் திசையில் ஜெர்மானியர் கட்டியிருந்த மேற்கு அரணை நேசப் படைகள் தகர்த்தெறிந்து விட்டன ; ஒரு முக்கியமான துறை முகத்தையும் கைப் பற்றின ; பிரான்சில் 13,000 சதுர மைல் நாட்டையும் மீட்டனர். என்றாலும், ஆபத்தான அடி ஒன்றிற்குக் கூட நேசப் படைகள் ஆளாகவில்லை. எதிரியின் பீரங்கிப் படைகளை நேச தேச விமானப் படைகள் சிதற அடித்தது தான், இதற்குக் காரணம். சிதறிய ஜெர்மன் படைகளை ஒன்று திரட்ட ஜெர்மன் படைத் தலைவர்களால் இயலாது போயிற்று.

பிரிட்டிஷ் கனடியப் படைகள் கெய்ன் நகரத்தைக் கடுமையாகத் தாக்கின. கெய்ன் ஒரு கேந்திர ஸ்தானம். இங்கிருந்து ரோடு வழியாகவும் ரயில் வழியாகவும், கால்வாய்கள் வழியாகவும் போக்குவரத்து வசதிகளுண்டு. இங்கிருந்து பாரீஸ் 150 மைல்கள் தூரந் தான். இதைக் காபபாற்ற ரோமல் தலைமையில் ஜெர்மன் படைகள் மகா வீரத் தோடு போராடின. கடையில் தோற்கும்படி நேர்ந்தது. இங்கே போர் கடுமையாக நடந்துகொண்டிருக்கும் போது, செர்பூர்க் தீபகற்பத்தை அமெரிக்கப் படைகள் கைப் பற்றின. இங்கே தோற்றுப் போன ஜெர்மன் படைகளின் தலைவர் வான் ரன்ஸ்டெட். இவரை, ஹெர் ஹிட்லர், பதவியினின்று நீக்கி விட்டார்.

இனி, ரஷ்யப் போர் முனையில் ஜெர்மன் படைகளின் நிலைமை என்ன வென்று கவனிப்போம். ரஷ்யர்கள் வெள்ளை ரஷ்யர் மீது படை யெடுத்து 2 வாரங்கள் தான் ஆகின்றன. வெள்ளை ரஷ்யாவிலுள்ள விடெப்ஸ்க்—ஷ்லோபின் பகுதியில் மகத்தான அரண்களை ஜெர்மானியர்கள் அமைத் திருந்தார்கள். இந்தப் பகுதியை ரஷ்யர்கள் வெகு வேகமாக வந்து தாக்கித் தகர்த் தெறிந்தார்கள். இதைக் கண்டு ஜெர்மன் படைகள் திகைத்துப் போயின. ஏனென்றால், முதலாவதாக இந்த அரண்கள் மகா உரமானவை யென்றும் தகர்க்கப் பட முடியாதவை யென்றும் ஜெர்மானியர்கள் நம்பி யிருந்தார்கள். இரண்டாவதாக இங்கே ரஷ்யர்கள் படையெடுத்து வருவார்களென்று ஜெர்மானியர்கள் எதிர் பார்க்கவே யில்லை. ருமேனியா, அல்லது ஹங்கேரி மீது படை. யெடுப்பார்கள் என்று தான் ஜெர்மானியர்கள் எதிர் பார்த்தார்கள். ஆகவே தான், ஜெர்மானியர்கள் ஏமாற்ற மடைந்து கோட்டை விட்டார்கள். இந்த யுத்தத்திலேயே இவ்வளவு சிறந்த தோர் வெற்றி ஒரு போதும் ஏற்பட்டதில்லை யென்று சொல்லலாம். 1941-ம் வருஷம் நிகழ்ந்த கொடுமைகளுக் கெல்லாம் பழிக்குப் பழி இப்போது வாங்கப்படுகிறது.

இப்போது பழைய, அதாவது யுத்தத்திற்கு முன்பிருந்த போலந்து எல்லைக்குள்ளே சோவியத் படைகள் புகுந்து விட்டன. லுப்லின், வார்ஸா, கிழக்குப் பிரஷ்யா ஆகிய பகுதிகளை நோக்கி சோவியத் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. வில்னாவை ரஷ்யப் படைகள் கைப்பற்றி விட்டால் லட்வியாவிற்கும் எஸ்டோனியாவுக்கும் கொண்டு போகப் படும் ஜெர்மன் சப்ளைகளை வெட்டிவிட, ரஷ்யர்களால் முடியும். அப்போது ஜெர்மானியர்களின் நிலைமை மகா மோசமாகிவிடக் கூடும். இந்த இரண்டு நாடுகளையும் ஜெர்மானியர் காலி செய்வது என்பது முடியாத காரியம்.

லோவ் நகரத்தின் மீது ரஷ்யத் தாக்குதல் ஆரம்பமாகி விட்டதென்று சென்ற சனிக்கிழமை பெர்லின் வானொலி நிலையம் கூறியது. பிரஞ்சுப் போர்முனை ஆரம்பமானதிலிருந்து ஸ்டாலின் மனதில் வெற்றி கிடைப்பது நிச்சயம் என்னும் எண்ணம் உறுதிப்பட்டிருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக ரஷ்யாவிலும் இத்தாலியிலும் விட்டுக் கொடுத்துக் கொண்டுவந்தாலும், பிரான்சில் நேசப்படைகளை முறியடிக்க வேண்டுமென்பதுதான் நாஜிகளின் எண்ணம். இந்த எண்ணத்தில் மண் விழுந்தது. இந்தப் போர்முனையில் உயிர் துறந்த ஜெர்மன் படைத் தலைவர்களின் எண்ணிக்கையைக் கொண்டு, அவர்கள் அடைந்துள்ள தோல்வி எவ்வளவு மகத்தான தென்று விளங்கும். ஜூன் மாதம் 6-ம் தேதிக்குப் பிறகு, ஜெர்மன் படைகளில் 23 படைத் தலைவர்கள் கொல்லப்பட்டனர் அல்லது கைதியாக்கப்பட்டனர்.

கெய்ன் பிரதேசத்தில், சென்ற வாரம் ஜெனரல் அய்சினோவர் தலைமையில் நடைய படைகள் ஜெர்மன் படைகளைக் கடுமையாகத் தாக்கின. பழைய நார்மன் தலைநகரமான கெய்ன் நகரத்தை நேசப் படைகள் கைப்பற்றின. பிரான்சில் நடைபெற்றப் போராட்ட ஆரம்பத்தில் லெப்டினெட் ஜெனரல் உமார் ப்ராட்லியின் அமெரிக்கப் படைகள் செர்பூர்க்கைக் கைப்பற்றிக்

கொண்டன. பிறகு, அங்கிருந்து லா ஹே டு புட்ஸ், காரென்டென், இசிக்னி ஆகிய இடங்களைக் கைப்பற்றினார்கள். இங்கெல்லாம் ஜெர்மன் படைகள் உயிரைக் கொடுத்துப் போராடின. அல்லாமலும் கடும் மழை ஜெர்மன் படைகளுக்குச் சாதகமாயிருந்தது. லா ஹே பலமுறை கைமாறியது. கடைசியாக நேசநாட்டுப் படைகள் வசமானது. இதற்குச் சற்றுக் கிழக்கே பிரிட்டிஷ் படைகளும் அமெரிக்கப் படைகளும் கெய்ன் நகரத்திற்குத் தென்மேற்கேயுள்ள ஓடான் ஆற்றைக் கடந்து அந்நகரத்திற்கு மேற்கேயுள்ள காக்பிகே என்னும் விமானக் கூடத்தைக் கைப்பற்றிக் கொண்டன. இங்கே ஜெர்மன் படைகளை நடத்திச் சென்ற ஜெனரல் ரோமல் பல முறை எதிர்த்துத் தாக்கினர். என்றாலும் காக்பிகே விமானக் கூடந் தவிர மற்ற இடங்களெல்லாம் நேசப் படைகள் வசமாயின.

விரைவில் ஐரோப்பியப் போராட்டம் முடிவதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. இந்தப் போராட்டம் முடிந்தால், அங்குள்ள பலவகைப் படைகளும் தளவாடங்களும் கிழக்காசியப் போர்முனைக்கு உதவியாக வரும். அப்போது ஜப்பானின் நிலைமை அம்பலத்திற்கு வந்துவிடும் என்பது உண்மை.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

நேச நாட்டுப் படைகள் மாரியானு தீவுகளைத் தாக்கியதனால் பீதியுற்றதைப் போல, வேறெந்தத் தாக்குதலினாலும் ஜப்பானியர்கள் பீதி யுற்றதில்லை. 1943-ம் வருஷம் நவம்பர் மாதம் 20-ம் தேதி மாகின், தாராவா தீவுகளை நேசப் படைகள் தாக்கிப் படை யெடுத்தன. நேச நாட்டுப் படைகள் ஆட்டங் காட்டுவதாக எண்ணி ஜப்பானியர்கள் அதை அலட்சியப் படுத்தினார்கள். இப்போது அவர்களுடைய பேச்சின் போக்கு மாறி விட்டது. ஜூன் மாதம் 23-ம் தேதி ஜப்பான் வானொலி நிலயத்திலிருந்து கீழ்க் கண்டவாறு ஜப்பானிய மொழியில் ஒலிபரப்பப்பட்டது :—

"சென்ற நவம்பர் மாதத்தில் எதிரிகள் நமது கில்பெர்ட்ஸ், மார்ஷல் தீவுகளைத் தாண்டித் தாண்டித் தாக்கினர். இது அவர்கள் கையாண்ட தந்திர முறை. இப்போது மாரியானஸ் தீவுகளைத் தாக்குகிறார்கள். மாரியானஸ் தீவுகளைக் கைப் பற்றுவது தான் அவர்களுடைய லட்சியம் போலும்."

மாரியானஸ் தீவுகளிலேயே முக்கியமானது செய்பான் தீவு. இதைக் கைப்பற்றுவது தான் நேச நாடுகளின் மத்திய பசிபிக் போராட்டத்தின் லட்சிய மென்று ஜப்பானியர்கள் எண்ணி யிருக்கிறார்கள் என்பது பற்றி கொஞ்சமும் சந்தேகமே கிடையாது.

மாரியானஸ் தீவுகளின் முகக்கியத்துவம்

மாரியானஸ் தீவுகளுக்கு லாட்ரோன்ஸ் என்றும் பெயர். இதில் 15 தீவுகள் சேர்ந்திருக்கின்றன. ஜப்பானிய ராதிக்கத்திற் குட்பட்ட தீவுகளில் இவையும் சில. இவை வியாபாரத் துறையில் முக்கியமானவை யல்ல ; ஆனால் இராணுவத் துறையில் மிகவும் முக்கியமானவை. எப்படி யென்றால், விமான தளமும் கடல் தளமும், கப்பற் படைதளமும் இங்கே யிருக்கின்றன. இவை மத்திய பசிபிக்கிலும் தென் பசிபிக்கிலுமுள்ள போக்கு வரவுப் பாதைகளுக்குக் காவலாக இருக்கின்றன.

செய்பான் தீவுக்குத் தென் கிழக்கில் 690 மைல்களுக் கப்பால் ட்ரக்கும், தென் மேற்கே 950 மைல்களுக்கப்பால் பாலோவும், வடக்கே 880 மைல்களுக்கு அப்பால் போனிலும் இருக்கின்றன. இம்மூன்றும் முக்கியமான ஜப்பானிய தளங்கள். ஜப்பானியத் தென் பசிபிக் கடல்களிலுள்ள தீவுகளுக்கு மிகவும் முக்கியமானவை. இவை மட்டுமல்ல. மாரியானஸ் தீவுகளை நேசப் படைகள் கைப்பற்றி விட்டதனால், பிலிப்பைன் தீவுகளுக்கு ஆபத்துக் கட்டாயம் உண்டாகும். எப்படி யென்றால் செய்பானுக்கு 1,600 மைல்கள் மேற்கே தான் பிலிப்பைன் தீவுகள் இருக்கின்றன. தூரத்தைப் பற்றி நாம் பேசுகிறபோது, ஒரு விஷயத்தை ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும். கடைசியாக நேசநாட்டுப் படைகள் முன்னேறித் தாக்கிப் பிடித்திருந்தது எனிவிடோக் (மார்ஷல்ஸ் தீவுகளைச் சேர்ந்தது). நேசப் படைகள், மாரியானஸ் தீவுகளைக் கைப் பற்றியதனால், இந்த ஜப்பானியரின் பசிபிக் தளத்திற்கு 1,125 மைல்கள் சமீபத்தில், வந்து சேர்ந்துவிட்டன.

மத்திய பசிபிக் போராட்டம்

ஜூன் மாதம் 2-வது வாரத்தில் செய்பான் கைப்பற்றப் பட்டது. எதிரி ஒலிபரப்புச் செய்தியி லிருந்து இது கைப்பற்றப் பட்ட தேதி ஜூன் மாதம் 15-ம் தேதி என்று தெரிகிறது. அங்கே கடுமையான ஜப்பானிய எதிர்ப் பிருந்தது. இருந்தாலும் நேச நாட்டுப் படைகள் அவர்களை விரட்டியடித்தன. இங்கு நடை பெற்ற விமானப் போரில் 300 ஜப்பானிய விமானங்கள் வீழ்த்தப்பட்டன. நேச நாட்டுத் தரைப் படைகள் முன்னேறிப் போன போது, ஜப்பானிய டாங்கிப் படைகளும், காலாட் படைகளும் கடுமையாக எதிர்த்தன. இதற்கு முன்னதாகவே செய்பான் தீவைச் சேர்ந்த ஆஸ்லெட்டோ விமானக் கூடத்தை நேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன இந்த வெற்றியைக் குறித்து, ஜப்பானிய வானொலி நிலயம் ஜூன் மாதம் 26-ம் தேதி கீழ்க் கண்ட வாறு குறிப்பிட்டது :—

"செய்பானிலுள்ள நமது விமானக் கூடங்களி லொன்று எதிரி வசமானது. இதை மீண்டும் நாம் கைப்பற்ற வேண்டும். இல்லாவிட்டால், நமது நாட்டிற்கும், தெற்கே போக்கு வரவிற்கும் மிகுந்த ஆபத்துண்டு."

ஜப்பானிய கப்பர் படை

பிலிப்பைன் தீவுகளுக்கும் மாரியானு தீவுகளுக்கும் இடையே ஜப்பானிய கப்பற் படை வந்து போர் தொடுக்குமென்பதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன வென்று அட்மரல் நிமிட்ஸ் ஒரு அறிக்கை வெளியிட்டதன் பயனாக, உலக முழுதும் கவனிக்க ஆரம்பித்தது. ஜப்பான் அப்போது வெளி யிட்ட அறிக்கைகளி லிருந்து, தாம் பசிபிக் மகா சமுத்திரத்தில் இழந்த தீவுகளை மீண்டும் கைப்பற்றுவதற்கு ஜப்பானிய கப்பற் படை முனைந்திருந்ததாகத் தெரிந்தது. இது பற்றி பிரஞ்சுந்தோசினு வானொலி நிலயம் ஜூன் மாதம் 25-ம் தேதி ஒலி பெருக்கிய சொற் பொழிவில் டோக்கியோ பத்திரிகை யொன்று கீழ்க் கண்டவாறு எழுதி யிருப்பதாகத் தெரிவித்தது :—

"ஜப்பானையும் பிலிப்பைன் தீவுகளையும் தாக்கும் பொருட்டு, தளங்களை அமைத்துக் கொள்ளுவதற்கு அமெரிக்கர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பேராபத்தை ஜப்பானிய கப்பற் படை அகற்ற வேண்டும்."

ஜப்பானிய கப்பற் படைக்கிருந்த விமானப் பாது காப்புக்கள் நாசமான பின் எதிர் பார்த்தபடி சமாளிப்பதற்கு முடியவில்லை. ஆகவே, தப்பி யோடியது. 1942-ம் வருஷம் ஜூன் மாதத்தில் மிட்வே தீவுகளுக் கருகில் நடை பெற்ற கப்பற் போராட்டத்தில் ஓட்ட மெடுத்ததைப் போலவே தான், இப்போதும் ஓட்ட மெடுத்தது. அதாவது தாக்க முன்னேக்கி வரும் கப்பல்களின் கைக் கெட்டாமல் மறைந்துவிட்டது. ஜப்பானியக் கப்பற் படையில், 4 அல்லது அதற் கதிகப்பட்ட போர் கப்பல்கள், 5 அல்லது 6 விமானந் தாங்கிக் கப்பல்கள், 5 டாஸ்கர் படைகள், க்ரூய்ஸர் கப்பல்களும், நாசகாரிக் கப்பல்களும் கொண்டிருந்தது தான் ஜப்பானிய கப்பற் படை. இவற்றின், ஒரு விமானந் தாங்கிக் கப்பலும், இரண்டு போர்க் கப்பல்களும் மூழ்கடிக்கப் பட்டன. 4 விமானந் தாங்கிக் கப்பல்களும் 5 போர்க் கப்பல்

(8-ம் பக்கம் பார்க்க)

அக்கிரமச் சேமிப்பும் கொள்ளை லாபமும்

அவசரச் சட்ட அமுல் வெற்றி

பத்திரிகைகளின் பூரண ஆதரவு

மிஸ்டர் சி. சி. தேசாய், ஐ.சி.எஸ்.

கட்டுப்பாடுகள் சம்பந்தமான அவசரச் சட்டம் வெளிவந்த போது, இச்சட்டம் காயித அளவிலேயே இருக்குமே யொழிய கவைக் குதவாதென்று தான் பொதுவாக நினைத்தார்கள். ஆனால் அனைவரும் அப்படி நினைக்கவில்லை. இச்சட்டத்தை அமுல் நடத்துவதுசமபந்தமாகக் கஷ்டங்கள் இருந்தன; இனனும் இருந்து கொண்டு தானிருக்கின்றன. அவற்றை அலட்சியப் படுத்துவதோ குறைவாக மதிப்பதோ முட்டாட் தனமாகும். ஆனால், அப்போது நாம் மேற்கொண்டிருந்த அச்சம் மிகைபட்டது என்று நடைமுறையைக் கொண்டு உணர்ந்து கொணடோம். எந்த ஆதாரத்தைக் கொண்டு நான் இப்படிக் கூறுகிறேனென்று அறிய நீங்கள் விரும்புவீர்கள். அதுபற்றிய சில உண்மைகளை நான் இங்கே கூறுகிறேன்.

அநியாய சேமிப்புக் காரர்களையும் கொள்ளை லாபமடிக்கிறவர்களையும் பற்றி நாடுமுழுவதும் விசாரணை செய்து, கண்டு பிடித்து தண்டிக்கப் படுவதாக, நாள் தோறும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமாக, இனவேற்றுமை, அரசியல் வேற்றுமை, சாதி வேற்றுமை முதலிய எதுவும் கருதப்படவில்லை. கல்கத்தா, லாகூர், டில்லி ஆகிய நகரங்களில் இச்சட்டத்திற்குள்ளான கம்பெனிகளில் ஐரோப்பியக் கம்பெனிகளு மிருக்கின்றன. டில்லி, லக்னோ, லாகூர், பிஷாவர், கல்கத்தா, சென்னை, கான்பூர், ஆகமதாபாத், பம்பாய் முதலிய நகரங்களிலுள்ள சில இந்தியக் கம்பெனிகளும் இச்சட்டத்திற்கு உள்ளாயின.

பத்திரிகை ஆதரவு

இந்தச் சட்டம் மீறப்படுவதாகப் பிரியாதுகள் வாராது என்று சொல்லப்பட்டது. அதிர்ஷ்ட வசமாக இந்தச் சந்தேகத்திற்கும் இடமில்லாமற் போய் விட்டது. பொதுமக்கள் நாள்தோறும் பிரியாதுகள் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். அநேகப் பெண்களுங் கூடப் பிரியாது கொடுத்திருக்கின்றனர். கொள்ளை லாபமடிக்கும் நோக்கங் கொண்ட இந்தப் பேராசைக்காரர்களின் கை வரிசைகளுக்கு உள்ளாகும் இவர்கள், அவர்கள் மீது பிரியாது கொடுத்து அதனால் நீதிமன்றங்களில் சாட்சியங்கூறும் கஷ்டத்திற்கும் உள்ளாகத் தயங்குவதில்லை. அரசாங்க உத்தியோகஸ்தர்களிடமிருந்து மட்டும் இந்த பிரியாதுகள் வருகின்றன வென்பதில்லை; ஐரோப்பியர்கள் மட்டுந்தான் பிரியாது செய்கிறார்களென்பதில்லை. உண்மையிலே, எல்லா இனத்தாரும், ஐரோப்பியரும் இந்தியரும், பணக்காரர்களும் ஏழைகளும், கம்பெனிகளுங் கூட பிரியாது செய்கின்றன. அரசாங்கக் கட்டுப்பாடுகளை யெல்லாம் துருவி ஆராய்வது பத்திரிகைகளின் வழக்கம். பத்திரிகைகள் இதுபற்றி மிகவும் அனுதாபத்தோடும் உதவியாகவு மிருக்கின்றன; இதற்குச் சாதகமாகப் பொது ஜன ஆதரவைத் திரட்டுகின்றன.

அமுல் நடத்தப்படும் முறை

இந்தச் சட்டம் எவ்வளவு கடுமையாக அமுல் நடத்தப்படுகிறது என்பது பற்றி, நீதி மன்றங்களில் நடைபெற்ற சில வழக்குகளைக் கீழே தருகின்றேன் :—

ஐக்கிய மாகாணத்தில் ஒரே மாதத்தில் 217 பிரியாதுகள் தாக்கலாயின. இவற்றுள் 199 வழக்குகள் பைசல் செய்யப்பட்டன. 168 வழக்குகளில் எதிரிகள் தண்டனை யடைந்தனர். இந்தத் தண்டனைகள் கடுமையானவை. எனவே, இப்போது விலைவாசிகள் ஐக்கிய மாகாணத்தில் நேர்மையா யிருக்கின்றன. டில்லியில் 10 வாரங்களில் 95 வழக்குகள் தாக்கலாயின. இவற்றில் 28 வழக்குகள் ஏற்கெனவே நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்டு விட்டன. சில வழக்குகளில் எதிரிகள் சிறைத் தண்டனை யடைந்தார்கள்; மற்றவர்கள் கடும் அபராதம் விதிக்கப்பட்டனர். பம்பாய் மாகாண அரசாங்கத்தார் ஒரு மாதத்தில் 35 வழக்குகளுக்கு, அனுமதி யளித்தனர். அதிக விலைக்கு விற்றவர்கள், விற்க மறுத்தவர்கள், விற்றதற்கு ரசீது கொடுக்க மறுத்தவர்கள், விலைப்பட்டியலை வெளியே போட்டுவைக்கத் தவறியவர்கள் ஆகியவர்கள் மீதுதான் அந்த வழக்குகள் தொடரப்பட்டன.

கொள்ளை லாபமடித்தவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் தான் பெரும்பாலும் தீர்ப்புக் கூறப்பட்டவை. ஒரு டப்பி சிகிரெட்டை 4 அணு அதிக விலைக்கு விற்ற டெல்லி வியாபாரி ஒருவருக்கு ரூ. 1,000 அபராதம் விதிக்கப்பட்டது. ஒரு சைகில் வியாபாரி ஒரு 'ட்யூபு'க்கு12 அணு அதிகவிலை பெற்றுக் கொண்டு ரசீது கொடுக்க மறுத்ததற்கு ரூ. 1,200 அபராதம் விதிக்கப்பட்டது. பம்பாயில் ஒரு நெருப்புப் பெட்டிக்குக் காலணு அதிகமாக வசூலித்த ஒரு சில்லரை வியாபாரிக்கு 3,640 பைசா அபராதம் விதிக்கப்பட்டது. இன்னொரு வியாபாரி 1 பைசா அதிகம் வசூலித்ததற்காக ரூ. 700 அபராதமும் செலுத்தத் தவறினால் 2 மாதக் கடுங்காவலும் விதிக்கப்பட்டார். கட்டுப்பாட்டு விலையைப்போல இரண்டு மடங்கு விலைக்கு ஒரு துண்டுத் தோலை விபெரோஸ்பூரில் விற்ற வியாபாரிக்கு 6 மாதக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. கல்கத்தாவில் கட்டுப்பாட்டு விலையான ரூ. 1-14-0-க்கு விற்க வேண்டிய ஒரு சிகிரெட் டப்பியை ரூ. 16-க்கு விற்ற கல்கத்தா வியாபாரி 3 மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றார். கட்டு பாட்டு விலையை விட அதிகமான விலைக்கு ஒரு பௌண்டன் பேனாவை விற்ற ஒரு ஐரோப்பியக் கம்பெனியின் உதவி மானேஜரும் விற்பனையாளரும் முறையே ரூ. 500-ம், ரூ. 100-ம் அபராதம் விதிக்கப் பெற்றனர். இந்தச் சட்டம் மிகக் கடுமையாகக் கையாளப்படுவதாக லக்னோவிலிருந்து வரும் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. ஒரே நாளில் 3 பேர் வழிகள் கைது செய்யபபட்டனர். கோரக்பூரில் ஒரு வழக்கில் 14 வயது பையன் முதல் எதிரியா யிருந்தான். இது கொள்ளை லாபமடித்தான் என்னும் வழக்கு. அவன் குற்றவாளி யென்று தீர்மானிக்கப்பட்டு, நன்னடத்தை ஜாமீன் வாங்கப்பட்டான். ஒரு கடைக்காரருக்கு 4 மாதக் கடுங்காவலும் ரூ. 1,000 அபராதமும் விதிக்கப்பட்டது. இவர் செய்த குற்றம் இரட்டிப்பு விலைக்கு ஒரு சிகிரெட் டப்பியை விற்றது தான். அந்த விற்பனைக் காலத்தில், தான், கடையிலில்லை யென்று எவ்வளவோ தூரம் அந்தக் கடைக்காரர் எடுத்து வாதித்தும் பயன்படவில்லை. 100-க்கு 450 முதல் 600 வரை லாபம் வைத்து மின்சார பல்புகளை விற்றதற்காக சென்னையிலுள்ள ஒரு மின்சாரக் கம்பெனியின் முதலாளிக்கு 3 மாதக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. இது போன்றதோர் குற்றம் செய்த மற்றொரு கம்பெனி முதலாளிக்கும் இது போலவே தண்டனை கிடைத்தது.

சமூக விரோதிகள்

இந்த வழக்குகளை விசாரணை செய்த மாஜிஸ்ட்ரேட் தன் தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார் :—

> "எதிரி சரக்குகளை வாங்கி 3 வாரங் கழித்து விற்றார். இவர் வாங்கிய விலையை விட மகா அக்கிரமமாக விலையை உயர்த்தி விற்றார். இப்படிப்பட்ட மகா கொடிய சமூக விரோதிகளை ஒடுக்க வேண்டு மென்பது தான் இச்சட்டத்தின் நோக்கம்."

சரக்குகளை விற்க மறுத்தாலும், ரசீது கொடுக்க மறுத்தாலும் இச்சட்டப்படி குற்றமாகும். இந்தக் குற்றத்திற்காக டில்லியிலுள்ள ஒரு மாஜிஸ்திரேட் ஒரு வியாபாரிக்கு ரூ. 1,000 அபராதம் விதித்



நார்மண்டி படையெடுப்பிற்கு உதவியாக இங்கிலாந்தின் தென் கரையிலிருக்கும் ஒரு துறைமுகத்திலிருந்து 'ஷெர்மன்' டாங்கிகள் கப்பலேற்றி அனுப்பப்படுகின்றன.

புகழ் வாய்ந்த பிரிட்டிஷ் படைகள், மீட்சிக் கப்பல்களில் ஏற்றி யனுப்பப்படுகிறது.

துக் கூறிய தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார் :—

"சரக்குகளை விற்க மறுப்பது சகிக்க முடியாத தோர் குற்றம். அதாவது சரக்குகளை வாங்குகிறவர்கள் வியாபாரியின் பேராசைக்கு உள்ளாக வேண்டும்; அல்லது சரக்கை வாங்காது போக வேண்டும். இந்த வியாபாரி ஒரு கிராமபோன் ரிக்கார்டு ஆல்பத்திற்கு மிகவும் அதிக விலை கூறினர். அதற்கு ரசீது கேட்டபோது விற்க மறுத்துவிட்டார். இன்னொரு ஊரில் சைகில் சாமான்கள் இருப்பில் வைத்துக் கொண்டு அதை விற்க மறுத்த ஒரு வியாபாரி கைது செய்யப்பட்டார். கான்பூரில் ஒரு வியாபாரி ரசீது கொடுக்க மறுத்ததற்காக ரூ. 200 அபராதம் விதிக்கப் பெற்றார்.

சிப்பந்தியும் குற்றவாளியே

ஒரு விஷயத்தை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். கொள்ளை லாபமடிக்கும் முதலாளிகளுக்கு உதவியாக விற்பனை செய்யும் கடையாட்களோ, ஏஜெண்டுகளோ, கையாட்களோ இந்தத் தண்டனைக்குத் தப்ப முடியாது. ஒரு 'பூட் பாலிஷ்' டப்பி விலை 9 அணுவாக விதிக்கப்பட்டிருக்க, அதை ரூ. 1–8–0-க்கு விற்ற கடைக்காரருக்கும் அவருடைய சிப்பந்திக்கும் முறையே ரூ. 500-ம், 100-ம் அபராதம் விதிக்கப்பட்டது. இந்தச் சட்டப்படி, கடைக்காரரை முதல் எதிரியாகவும், அவருடைய சிப்பந்தியை அக்குற்றம் புரிய உடந்தையா யிருந்த காரணத்திற்காக இரண்டாவது எதிரியாகவும் சேர்த்து வழக்குகள் தொடரப்படுகின்றன. கட்டுப்பாட்டு விதிகளைக் கடுமையாகவும் ஈவிரக்கமில்லாமலும் அமுல் நடத்துவதில் அரசாங்கத்தார் எவ்வளவு அக்கரை கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றி, பொது மக்களுக்கு எடுத்துக் கூறி திருப்தியடையச் செய்வதற்கு முற் கூறிய வழக்குகளே போதுமானவை. கம்பளித் துணி, பௌண்டன் பேனா, சைகில், சைகிள் பகுதிகள், படமெடுத்துத் தயாரிப்பதற்குப் பயன்படும் பொருட்கள், சிகிரெட்டு, செயற்கைப் பட்டு நூல், துப்பாக்கிக் குண்டுகள், மின்சார பல்புகள், க்ஷவரக் கத்தித் தகடுகள், ரேடியா வால்வுகளும் மற்றப் பகுதிகளும், பட்டுத் துணியுங் கூட இன்னின்ன விலைக்கு அதிகமாக விற்கக் கூடாது என்னும் கட்டுப்பாட்டுச் சட்டமும் பிறந்திருக்கிறது.

இச்சட்டத்தின் நோக்கம்

இந்தச் சட்டம் பிறக்கு முன்னதாக முற் கூறிய பொருட்களின் விலைகள், 1-க்கு 3 வீதம் உயர்ந் திருந்தன. பூட் பாலிஷ், கம்பளித் துணி, துப்பாக்கிக் குண்டு ஆகியவற்றின் விலை 1-க்கு 5 மடங்கு உயர்ந்திருந்தது. விலை வாசிகள் உயர்ந்து கொண்டே போவதைத் தடுத்துக் குறைத்து, சாமான்கள் வாங்குகிறவர்களுக்கு நன்மை புரிய வேண்டுமென்பது தான் இந்த அவசரச் சட்டத்தின் நோக்கம். இந்த அவசரச் சட்டத்தால் நல்ல பலன் ஏற்பட்டது. விலைவாசிகள் உயருவது தடுக்கப்பட்டது. அநேக இனங்களில் விலைவாசிகள் குறைந்துவிட்டன. இந்த அவசரச் சட்டப்படி எந்த எந்த சாமான்களின் உச்ச விலை நிர்ணயிக்கப் பட்டு விட்டனவோ, அவற்றின் விலைகள் எத்தனை சத விகிதத்திற்குக் குறைந்திருக்கின்றனவென்று புள்ளி விவரங்களை நான திரட்டியிருக்கிறேன். சைகில் பகுதிகளின் விலைகளில் 36 சதவிகிதமும், பௌண்டன் பேனா விலையில் 53 சத விகிதமும், கம்பளித் துணி விலையில் 54 சத விகிதமும், க்ஷவரக் கத்தித் தகடு விலையில் 55 சத விகிதமும், பூட் பாலிஷ் விலையில் 62 சதவிகிதமும், இந்தச் சட்டம் ஏற்படாததற்கு முன்பிருந்த விலையை விட இப்பொழுது குறைந்திருக்கின்றன. இந்தப் பலன்கள் திருப்திகரமானவை தான். என்றாலும், யுத்தத்திற்கு முன்பிருந்த விலைவாசிகளை விட இவை மிகவும் உயாவானவை.

பிற நாடுகளில் விலை உயர்வு

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா, தென்னுப்பிரிக்கா, முதலிய நாடுகளின் விலை உயர்வை விட இங்குள்ள விலை உயர்வு மிகவும் அதிகந் தான் என்பதை நாம் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும். அந்நாடுகளில் கிடைத்த பலன்கள், நம் நாட்டில் கிடைக்கா. ஏனென்றால், கொள்ளை லாபக்காரர்களை ஒடுக்க மிகவும் தாமதித்துத் தான் ஆரம்பித்தோம். பண்டங்களைத் தகுந்தபடி சப்ளை செய்யக் கூடிய நிலைமை ஏற்படுகிற வரையில், வெகு வேகமாக விலைவாசிகளைப் பெரிதும் குறைக்க முயற்சிப்பது வீண் வேலையாகத் தான் முடியும். வாழ்க்கைச் செலவின் எல்லாப் பகுதிகளிலும் செலவு குறைந்தால் தான் விலைவாசிகளையும் குறைக்கலாம்.

இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவது பற்றி, வியாபாரிகளையும், வாங்கி யுபயோகிப்பவர்களையும் கலந்து கொண்டு தான் இந்தச் சட்டம் அமுல் நடத்தப்படுமென்று கைத் தொழில் இலாக்கா அங்கத்தினர் இந்தச் சட்டத்தைப் புகுத்திப் பேசியபோது குறிப்பிட்டதை, இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன், எல்லாரையும் ஒரே மாதிரியாக நடத்த வேண்டுமென்பது தான் நமது ஆசை. கொள்ளை லாபம் எல்லா வியாபாரிகளும் முன்பு அடைந்தார்கள் என்பது உண்மை தான். என்றாலும், அது இந்நாட்டின் பொருளாதாரத் துறையில் ஒரு முக்கியமான வேலையை நிறைவேற்றுகிறது. அவர்களுடைய ஆலோசனையும் ஒத்துழைப்புமின்றி எந்த விதக் கட்டுப்பாடும், வேலை செய்ய முடியாது. இந்தக் கட்டுப்பாட்டு விதிகளை அமுல் நடத்தும் அதிகாரிகள் என்ன தான் கடுமையான நடவடிக்கைகளை மேற் கொண்டாலும் அப்போது பலிக்காது.

வியாபார ஆலோசனைக் கமிட்டிகள்

ஆகவே, அநேக வியாபார ஆலோசனைக் கமிட்டிகள் ஏற்பட்டன. கம்பியில்லாத் தந்தி செட்கள், புத்தகங்கள், கம்பளியால் செய்யப்பட்ட பொருட்கள், பட்டுத் துணிகள், சோப், முக மா, சாராய வகைகள்,

(8-ம் பக்கம் பார்க்க)

வெகு சீக்கிரத்தில் நேச தேச வெற்றி

சர்வ தேச சங்கத்தின் இயலாமை

ஆங்கில-ரஷ்ய ஒப்பந்தம் ஏற்பட்டது ஏன்?

ராஜ்ய சேவப்ரவீன கான்பகதூர் ஜி.எஸ் ஏ. கரீம் சுகரவர்த்தி, எம்.பி.இ. (திருவாங்கூர் மாஜி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்.)

உலக வல்லரசுகளான இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா இம்மூன்று நாடுகளும் சென்ற ஐரோப்பிய மகா யுத்தத்தில் நேச நாடுகளாக இருந்து ஜெர்மானியருடன் போர் புரிந்தன. ரஷ்யச் சக்ரவர்த்தி ஸாரின் எதேச்சாதிகாரத்தினால் ரஷ்யாவில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டு, ஸார் சக்கரவர்த்தியை விரட்டிவிட்டு பொது உடமை அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. 1917-ல் ரஷ்யப் பொது உடமை அரசாங்கம் ஜெர்மனியருடன் ராஜி செய்து கொண்டு, நேச நாட்டினரைத் தங்கள் கதியைத் தீர்த்துக் கொள்ள விட்டு விட்டது. ரஷ்யாவில் பொது உடமைக் கொள்கை ஏற்பட்டு அதை உலகம் பூருவும் பரப்ப வேண்டுமென ரஷ்யர்கள் கருதியதை உலக வல்லரசுகள் கண்டு கலக்கமடைந்தன. இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளிலுள்ள, தீவிரவாதிகள் இந்தப் பொது உடமைக் கொள்கைக் காரர்களுடன் நெருங்கிப் பழக நேர்ந்தது. ரஷ்ய நாட்டின் அரசாங்க தூதராக இருந்த லிட்வினுப் தம் திறமையினாலும் தாராளத் தன்மையாலும் ஜனநாயக நாட்டினருடன் ரஷ்ய பொது உடமை அரசாங்கத்தை நெருங்கிப் பழக வேலை செய்தார். இதன் பயனால் ரஷ்ய நாட்டையும் சர்வ தேச சங்கத்தில் ஒரு அங்கத்தினராகச் சேர்க்கும்படி ஏற்பட்டது.

வெறிகொண்ட ஜெர்மனிக்கு இரை.

ஹிட்லர், ஜெர்மனியின் சான்ஸலரான பிறகு, பிரமாதமாக ஆர்பரித்து தனது நாஸிக் கட்சியைப் பற்றி பிரசாரம் செய்தார். அதில் அவர் பொது உடமைக் கொள்கையைப் பெரிதும் கண்டித்தார். அதனால் ஜனநாயக வல்லரசுகளில் சிலர் ஹிட்லர் மீதும் அனுதாபம் கொண்டனர். அவர்களுக்கு ஆறுதலும் ஏற்பட்டது. இந்த ஹிட்லர் மீது அனுதாபக் கொள்கை 1938-ல் முனிச் ஒப்பந்தத்தில் உச்ச ஸ்தான மடைந்தது. ரஷ்யாவை அறவே ஒதுக்கித் தள்ளிவிட்டனர். ஜெர்மனிக்குப் பக்கத்திலிருந்த சிறிய ஜெக்கோஸ்லோவிக்கியா நாட்டை வெறிகொண்ட ஜெர்மன் ஓநாய்க்கு இரையாக்கினர்கள்.

சர்வதேச சங்கத்தின் திறமை!

சர்வதேச சங்கத்தினால் சிறிய நாட்டின் உரிமையைக் காப்பாற்ற முடியாது போனதையும் ஹிட்லரின் மிரட்டலுக்கு அது அஞ்சி நிற்பதையும் கண்டு, இச் சங்கம் ஒன்றுக்கும் உதவாதென்றும் ஐரோப்பாவிலும் அமைதியை நிலைநாட்ட முடியாது என்றும் ரஷ்யர்கள் கண்டு கொண்டனர். எனவே, ஹிட்லருடன் நேசங் கொண்டு காரியம் சாதிப்பதென முடிவு கொண்டனர். 1939-ல் ஜெர்மனியும் ரஷ்யாவும் நேசநாடுகளாயின. ஒரு பெரும் சக்தியான ரஷ்யா நாடு நேசமாக இருப்பதினால் ஐரோப்பிய மேற்கு வல்லரசுக்களுடன் ஜெர்மனி விரோதமாக கிளம்பியது.

பின்லாந்து பலி.

ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்கும் மத்தியிலிருக்கும் போலந்தை ஆளுக்குப் பாதியாகப் பங்குபோடத் தீர்மானித்தன. ஜெர்மானியர் போலந்தைத் தாக்கும் சமயத்தில் ரஷ்யா பால்டிக் நாடுகளைப் பிடித்துக் கொண்டது. பின்லாந்து மட்டும் எதிர்த்து நின்றது. அது சின்னாபின்னமாக்கப் பட்டது. தங்கள் பஸரேபியா மாகாணத்தை ஆக்ரமித்துக் கொண்டனர். அத்துடன் போலந்தில் ஒரு பகுதியையும் தங்கள் வசமாக்கிக் கொண்டனர்.

ரஷ்யா மீது ஜெர்மன் படைபெடுப்பு.

இதனால் இயற்கையாகவே ஜெர்மானியர்களுக்கு இது பிடிக்கவில்லை. ஒருவருக்கொருவர் மனக்கசப்பு ஏற்பட்டது. ஜெர்மானியர் மேற்குப் போரை முடித்துக் கொண்டு தங்கள் மீது பாயலாமென முஸ்தீப்பும் செய்தனர். பால்கன் நாட்டில் ஜெர்மானியர் கை ஓங்கி நின்ற பொழுது விரோதம் முற்றியது. கடைசியில் 1941-ம் வருஷம் ஜூன் மாதம் 22-ந் தேதி ரஷ்யா மீது ஜெர்மனியர் படை எடுத்தனர். அந்த நாளின் ஞாபக நாள் தான் இன்று மூன்றுவது ஆண்டு நாளாக உலகம் பூருவும் கொண்டாடுகிறது. ஆனால் இத் தருணத்தில் இரண்டு மகான்கள் ஆங்கில-ரஷ்ய உறவுக்கு ஏற்பாடு செய்தனர். காரியவாதியான ஸ்டாலினும் சர்ச்சிலுமே யாகும். என்று ஜெர்மானியர் ரஷ்யாவைத் தாக்கினர்களோ அதே தினத்தில் சர்ச்சில் எவ்வித நிபந்தனையுமின்றி ரஷ்யாவுக்கு உதவியளிப்பதாகக் கூறினர். எடுத்த எடுப்பிலேயே, ஜெர்மானியர்கள், பால்டிக் நாடுகளை மீட்டு, ரஷ்ய மேற்கு மாகாணங்களையும், கைப்பற்றினர்.

இரண்டு வித தற்காப்புக்கள்.

அதன் பின் அவர்கள் உக்ரைன் பகுதியில் திரும்பினர். 1941-ம் வருஷ இறுதியில் மாஸ்கோவை நெருங்கினர். மாஸ்கோ வீராவேசத்துடன் எதிர்த்து நின்றது. தெற்கில் ரஷ்யர்கள் உக்ரைனின் பெரும் பாகத்தை இழந்துவிட்டார்கள். ஆயினும் அவர்கள் தங்களை இரண்டு விதங்களில் காப்பாற்றிக் கொண்டனர். ஒன்று எதிரிக்கு விடாது பொருள்களை நாசமாக்கியது. மற்றென்று தொழிற்சாலைகள் யாவற்றையும் கிழக்குப் பகுதிக்கு மாற்றிவிட்டது. பிறகு டிசம்பர் மாதத்தில் ரஷ்யர்கள் ஜெர்மானியரை எதிர்த்துத் தாக்க ஆரம்பித்து, பெரும் பாகத்தை மீண்டும் கைப் பற்றினர்.

ஆங்கில ரஷ்ய ஒப்பந்தம்.

சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸின் பெரு முயற்சியால் 1942-ம் வருஷ மேமீ ஆங்கில ரஷ்ய உடன்படிக்கை கையெழுத்தானது. 1942-ல் ஜெர்மானியர்கள மற்ரோர் புறம் தாக்கி ஸெபஸ்டபோலைக் கைப்பற்றி காகஸிஸ் பிரதேசத்தில் நுழைந்தார்கள். 1942 முடிவில் வீர பராக்கிரமத்துடன் ஸ்டாலின்கிராட் நகரம் எதிர்த்து நின்று 1943 ஜனவரியில் தன்னை மீட்டுக் கொண்டது. அன்று 1943-ம் வருஷம் ஆரம்பித்த ரஷ்யத் தாக்குதல் வேகம் தொடர்ச்சியாக வெற்றி அடைந்து ஒன்றின் பின் ஒன்றாக ரஷ்ய எல்லைகள் மீட்கப் பட்டன. ஹிட்லருக்கு இரையான நாடுகளும் சார்பு நாடுகளும் (தெற்கில் ரொமேனியாவும் ஹங்கேரியும், மேற்கில் போலந்தும், வடக்கில் பின்லந்தும்) ரஷ்யாவின் மஹத்தான பலத்தையும் வெற்றியையும் உணர்ந்து விட்டன.

ரஷ்யரின் மகத்தான வெற்றி.

இம் மகத்தான ரஷ்ய வெற்றிக்கு காரண பூதமாக இருந்தவற்றில் தலைமை வகித்தவர்கள் ஸ்டாலினும் அவருடைய சேனாபதிகளும், அவர்கள் யாவரையும் ஒன்று திரட்டிய ஸ்டாலின் புத்திக் கூர்மையுமே யாகும். மேலும் அமெரிக்க ஆங்கில நாட்டுக்கு அருவருப்பாக விருந்த சர்வதேசப் பொது உடமை சங்கத்தை 1943-ல் ஸ்டாலின் கலைத்து விட்டதுடன் மீண்டும் மத சம்பிரதாயங்களையும் புனருத்தாரணம் செய்து விட்டார். ஸாரின் கொடுங்கோன்மையிலும் அடிமை வாழ்விலும் வாழ்ந்த மக்கள் சுதந்திரமும், நல்லாட்சியும் ஏற்பட்ட பிறகு, அங்கு என்று மில்லாத பொருளாதார வகையில் ரஷ்யாவில் முடிவடைந்தன. பொது உடமை வீரர்கள் தங்கள் யுத்தமாகக் கருதி வீராவேசத்துடன் போர் புரிந்து தாய் நாட்டைக் காப்பாற்றுகிறனர்.

ஸ்டாலின் குறை தீர்ந்தது.

அத்துடன் சர்ச்சிலின் பழைய போல்ஷிவிக் வருத்தத்தையும் தவிர்த்து, பொதுவான நாஸிஸத்தை அடக்க முற்பட்டது. அவர் ஸ்டாலினுடன் கலந்து பேசியதில் சகல வித்தியாசங்களும் தணிந்தன. நேச நாட்டினர் ரஷ்யாவுக்கு அனுப்பிய ஆயுதங்களும், ஆகாய விமானங்களும், ரஷ்யாவுக்கு கிடைத்த வெற்றிக்கு ஊதியமாயின. இரண்டாவது போர் முனை ஆரம்பிக்காத குறை ஸ்டாலினுக்கு வருத்தமாக இருந்தது. அது இப்

(11-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

களும் சேதமாயின. 401 விமானங்கள் நாசமாக்கப் பட்டன. கப்பல் போராட்டத்திலேயே மகா ஆதிக்கமும் அழிக்குந் தன்மையுங் கொண்டது, 58-ம் நம்பர் அமெரிக்க டாஸ்க் படை. இதைச் சேர்ந்த 40 விமானங்கள் சேதமாயின; இரண்டு விமானந் தாங்கிக் கப்பல்களுக்குச் சற்று காயமேற்பட்டது.

போனின் தீவுகள்

டோக்கியோவிற்குத் தெற்கே 615 மைல்களுக்கு அப்பாலும், சைபானுக்கு 880 மைல்களுக்கு அப்பாலுமிருப்பது போனின் தீவுக் கூட்டம். இவை ஜப்பானியப் பாதுகாப்பிற்கு எவ்வளவு முக்கியமானவை என்பது தெளிவாகத் தெரிகிறது. இவற்றை ஜூன் மாதம் 23-ம் தேதி நேச நாட்டு விமானங்கள் தாக்கின. அப்போது 5 ஜப்பானியக் கப்பல்களும், 72 விமானங்களும் நாசமாக்கப்பட்டன. இந்த இரண்டுத் தீவுக் கூட்டங்களையும் பாதுகாக்கவேண்டி நடத்திய போராட்டத்தில், ஜப்பானியர்களின் 747 விமானங்கள் நாசமாயின; 30 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 51 கப்பல் சேதமடைந்தன.

எதிரியின் நிலைமை

1942-ம் வருஷத்தில் கோரா கடலிலும், மிட்வே தீவுகளிலும் தமக்குக் கிடைத்த தோல்விகளை ஒப்புக் கொள்ளாத ஜப்பானியர்கள் இந்த இரண்டு தீவுக் கூட்டங்களிலும் தமக்குக் கிடைத்த தோல்விகளை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளுகின்றனர். ஜப்பானிய மக்களுக்காக ஜூன் மாதம் 23-ம் தேதி ஜப்பானிய வானொலி நிலையத்தினின்று ஒலி பரப்பப்பட்டதோர் பிரசங்கத்தில், கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டது :—

"நாம் செய்பானை இழந்துவிடுவோமானால், நமது நாட்டையே எதிரிகள் வெடிகுண்டுகளைக் கொண்டு இலகுவில் தாக்கவும் கூடும். அன்றியும் தெற்கே சப்ளைகள் கொண்டுபோவதற்கும் ஆபத்தேற்படும். ஆகையால், செய்பானை நாம் இழந்தோமானால் நமது எதிர்கால போர்முறை பெரிதும் குந்தகப்படும். செய்பானில் நிரந்தரமானதோர் தளத்தை அமைத்துக் கொள்ளும்படி விட்டுவிட்டோமானால், மேற்குப் பசிபிக் சமுத்திரத்தில் நடைபெறக் கூடிய கப்பற் போருக்கும் பெரும் ஆபத்தாக முடியும். ஏனென்றால் பெரிய வெடிகுண்டு விமானங்களைக் கொண்டு ஜப்பானையே தாக்கும்படி நேசநாட்டினர் செய்யக் கூடும்."

பசிபிக் மகா சமுத்திரத்தில் நேச நாடுகளுக்கிருக்கும் படை பலத்தைக் குறித்து ஜப்பான் பெரிதும் பீதிகொண்டிருக்கிறது. இதை அது மறைமுகமாகவும் ஒப்புக்கொள்ளுகிறது. ஜூன் மாசம் 26-ம் தேதி ஜப்பானிய வானொலி நிலையத்தினின்று ஒலி பரப்பப்பட்டதோர் பிரசங்கத்தில் பொய்யான புள்ளி விவரங்களைக் கூறி கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டது :—

"இதினின்று எதிரிக்கு ஏராளமான நஷ்டமென்று தெரிகிறது. இதைக் கொண்டே யுத்த நிலைமையை நாம் நிர்ணயிக்கக் கூடாது."

ஜப்பானியரின் கூட்டாளியான ஜெர்மானியர்களும் பசிபிக் போராட்ட நிலைமையை வெகுவாகக் கவனித்துக் கொண்டுதான் வருகின்றனர். சென்ற ஜூன் மாதம் 25-ம் தேதி பெர்லின் வானொலி நிலையத்தில் ஒலி பரப்பப்பட்டதாவது :—

"செய்பானில் ஒரு அமெரிக்க விமான தள மேற்படுமானால், டோக்கியோவுக்கு ஆபத்தாக முடியும். ஏனென்றால் அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் அங்கிருந்து வெகு எளிதில் பிலிப்பைன் தீவுகளுக்கும் டோக்கியோவுக்கும் போக முடியும்."

என்றாலும் ஜப்பானியருக்குச் சலுகையாக சில எதிரி வயப்பட்ட வானொலி நிலையங்கள் பேசுகின்றன. போர்முனையிலிருந்து ஜப்பானியக் கப்பற்படை வாபீசானதற்கு படேவியா வானொலி நிலையத்திலிருந்து ஜூன் மாதம் 25-ம் தேதி ஒலி பெருக்கிய காரணமாவது :—

"எந்தச் சமயத்தில் போராடவேண்டுமென்று ஜப்பானிய கப்பற்படைக்குத் தெரியும். எங்கே போராட வேண்டுமென்பது பற்றி, அக்கப்பற் படைத் தலைவர் தான் நிர்ணயிப்பார். பெர்ல் துறைமுகத்திலிருக்கும் பசிபிக் படைத் தலைவராகள் கூறுகிறபடி பிரதம கப்பற் படைத் தலைவர் நடக்கிறவரல்ல."

(6-ம் பக்கம்—தொடர்ச்சி)

பௌண்டன் பேனுக்கள், துப்பாக்கிகளும் வெடி மருந்துகளும், இவை யனைத்திற்கும் கமிட்டிகள் ஏற்பட்டிருக்கின்றன. சமீபத்தில் சைகில்களுக்கும், மூக்குக் கண்ணாடிச் சாமான்களுக்கும் என்று இரண்டு கமிட்டிகள் ஏற்பட்டிருக்கின்றன. அவசியம் தோன்றினால் மேலும் கமிட்டிகள் ஏற்படக் கூடும். அன்றியும், பொருளை உபயோகிக்கும் ஆண்களையும் பெண்களையும் கொண்ட உத்தியோகப் பற்றில்லாதவர்களை யுடைய மத்தியக் கமிட்டியொன்றை அரசாங்கத்தார் நியமித்திருக்கிறார்கள்.

பொதுமக்கள் ஒத்துழைப்பு அவசியம்

பண்டங்களை சேமித்து வைப்பதையும் கொள்ளை லாப மடிப்பதையும் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தார் என்னென்ன முறைகளைக் கையாண்டிருக்கிறார்கள் என்பது பற்றி இது வரை கூறி வந்தேன். ஒரு விஷயத்தைக் குறித்து இங்கே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அதாவது பொது மக்கள் அரசாங்கத்தாரோடு இது பற்றி ஒத்துழைக்க முன் வராது போனால், இந்தச் சட்டங்கள் பயனற்றவை யாகிவிடும். அதிர்ஷ்ட வசமாக இந்த ஒத்துழைப்புப் பெருகிக் கொண்டிருக்கிறது.

நமக்குப் பெரிய தலைவலியா யிருப்பது திருட்டு விற்பனை. இதைத் தடுப்பதற்கும் பொது மக்கள் உணர்ச்சியும் கூட்டுறவும் மிகவும் பயன்படும். மிக மிக அவசரமான தோர் நிலைமை ஏற்பட்டாலல்லது, கட்டுப்பாட்டை மீறிய விலைக்கு எதையும் வாங்கலாகாது. இரண்டாவதாக நியாயமற்ற விலைக்கோ. கட்டுப்பாட்டு விலையைவிட அதிகமாகவோ எந்தப் பொருளாவது விற்கப்பட்டால், அதுபற்றி உடனே அதிகாரிகளுக்குத் தகவல் கொடுக்க வேண்டும். சமுதாய விரோதிகளைக் குறித்து சதா காலமும் எச்சரிக்கையா யிருக்க வேண்டு மென்பது பொது மக்களின் கடமை எனக் கருத வேண்டும். திருட்டு விற்பனையை முன்னிட்டுப் பண்டங்கள் மறைத்து வைக்கப்படாதிருக்க வேண்டி, சீக்கிரத்தில் அரசாங்கத்தார் ஒரு முறையைக் கையாளப் போகிறார்கள். அதன்படி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான சரக்குகளும், உள் நாட்டுச் சரக்குகளும் கட்டுப்பாட்டின்படி விநியோகிக்கப்படும். உபயோகிப்பவர்கள் நேரிடையாக வாங்கக் கூடிய பொருட்கள் திருட்டு விற்பனைக்கோ, கொள்ளை லாப விற்பனைக்கோ உள்ளாகாதிருக்கும் பொருட்டு, சில்லரை வியாபாரிகளுக்கு விநியோகிக்கப்படும். இந்தத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும் போது, இது பற்றி விளக்கமாக எனது அடுத்த பிரசங்கத்தில் கூறுகிறேன். என்றாலும் பழைய இருப்புச் சாக்குகள் சம்பந்தமாக, திருட்டு விற்பனை நடை பெறத்தான் செய்யும். எல்லா நாடுகளிலும் திருட்டு விற்பனை நடைபெறுகின்றது. பொது ஜனக் கருத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ள நாடுகளிலும் இதே நிலை தான். பொது மக்கள் விழிப்போடிருந்து ஒத்துழைப்பார்களானால், திருட்டு விற்பனையே கூடிய வரை நடை பெறக் கூடாதபடி செய்துவிடலா மென்னும் நம்பிக்கை எனக்குண்டு.

கிழக்கே ஷில்லாங்கிலிருந்து மேற்கே பிஷாவார் வரை சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறேன். பல வகைப்பட்டவர்களுக்கும் இதனால் என்னென்ன சாதக பாதகங்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்று நான் நேர் முகமாகத் தெரிந்து கொண்டிருக்கிறேன். இந்த அவசரச் சட்டத்தின் ஆதிக்கம் வர வர உறுதிப்பட்டுக் கொண்டு வருகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. நமது வேலை கடுமையானது தான். என்றாலும் கொஞ்சமும் நாம் தளர்ச்சியடைய மாட்டோம். எந்த விதத் தடைகளையும் பொருட்படுத்தாமல், நாட்டின் தேவைக்கு ஏற்ற முறையில் இந்த அவசரச் சட்டம் பயன் படுத்தப்படும்.

[பம்பாய் வானொலி நிலையத்தினின்று சமீபத்தில் ஒலி பரப்பப்பட்ட பிரசங்கத்தின் மொழி பெயர்ப்பு.]

ஜெர்மனிக்கு ஆபத்து!

காலம் எப்படி மாறுகிறது பாருங்கள்!

இரண்டு வருடங்களுக்கு முன்வரை, ஜெர்மனியால் பிற நாடுகளுக்கு ஆபத்துக்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இப்பொழுது ஜெர்மனிக்கே ஆபத்து வந்திருக்கிறது. இதை நேச தேசத்தார்கள் ரொம்ப நாட்களாகவே சொல்லி வருகிறார்கள். ஜெர்மனி மீது என்றிலிருந்து நேச தேச விமானிகள் அஞ்சாது பட்டப் பகலிலேயே, எங்கு வேண்டுமானாலும் போய்த் தாக்கத் தொடங்கினார்களோ, அன்றிலிருந்தே ஜெர்மனியின் பெருமைக்கு ஆபத்து வந்து விட்டது. ஜெர்மனி மீது எந்தப் பயலும் பறக்க முடியாது என்று சொன்ன ஹிட்லரின் சகாக்களின் வாய்கள் அடைத்தே போய் விட்டன. ஜெர்மனிக்கு உண்மையில் ஆபத்து வாராதென்றே அவர்கள் கனவு கண்டு கொண்டிருந்தார்கள் போலிருக்கிறது. நாளாக ஆக நிலைமை மோசமாகிக் கொண்டே வந்ததே ஒழிய, சீர்திருந்தவே இல்லை.

'சரி! இப்படியே மேலே இருந்து குண்டுகளை வீசி லண்டனை நம்மால் அழிக்க முடியவில்லை. அதே போல, நேச தேசத்தாரும் குண்டுகளை வீசி மட்டும் நம்மை அழித்து விட முடியாது. கடலைக் கடந்து அல்லவா அவர்கள் வர வேண்டும் மேற்கே யிருந்து வரட்டும் பார்க்கலாம்! அவர்கள் மண்டையைச் சிதற அடிக்கிறோம். மற்றத் திசைகளிலிருந்து லேசில் ஜெர்மனியை எவனும் நெருங்கி விட முடியாது. எவ்வளவு ஆட்கள் வைத்திருக்கிறோம். எவ்வளவு பாதுகாப்புகள் இருக்கின்றன! ஹூம்! வருவதாவது, மண்ணாங்கட்டியாவது?' என்று ஜெர்மன் தலைவர்கள் எண்ணியிருக்கக் கூடும். அவர்கள் பேச்சுக்களை பொது மக்களும் கேட்டுக் கொண்டிருந் திருக்க வேண்டும்.

எல்லாம் எதிர்பார்த்ததற்கு விரோதம்

ஆனால், நடக்கும் விஷயங்கள் எல்லாம் அவர்கள் எதிர் பார்த்த வற்றிற்கு விரோதமாகவே இருக்கின்றன. ஜெர்மனிக்கு எல்லாத் திசைகளிலிருந்தும் ஆபத்து, புயல் போல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இது விஷயத்தில் ஜெர்மானியருக்குக் கூட இப்பொழுது சந்தேகமேயில்லை. பாவம்! கேட்பதற்கே பரிதாபமாக இருந்திருக்கும் போன வாரத்தில் ஒரு நாள் ஜெர்மன் வாயாடி மந்திரி கொப்பல்ஸ் துரை ரேடியோவில் பேசிய பொழுது கேட்டிருந்தால்!

'ஜெர்மன் தேசத்திற்கு ஆபத்து'

அவரே வாய்விட்டு, 'ஜெர்மன் தேசத்திற்கு ஆபத்து வந்திருக்கிறது' என்று அலறியிருக்கிறார். பெரிய மலையே புரண்டு மேலே வந்து விழுந்த போதிலும், 'கடுகு கூட நகர்ந்ததாகத் தெரியவில்லையே!' என்று கடுகளவு கூடக் கூசாது புளுகும் ஒரு மனுஷர், இப்படி அலறும்படியான காலம் வந்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் அவரது குரு ஹிட்லர் ஆரம்பித்த போரின் அக்ரமத் தன்மையும், நேச தேசத்தார் பொறுமையோடு ஆரம்பத்தில் கிடைத்த அடிகளையெல்லாம் வாங்கி சமாளித்துக் கொண்டு, இப்பொழுது பெரிய போடாகப் போடுவதும் தான்.

'ஜெர்மனிக்கு ஆபத்து வந்திருக்கிறது. ஆகவே இந்த ஆபத்தை சமாளித்தே தீர வேண்டும். ஜெர்மானியர் என்ற பூண்டே இல்லாமல் ஒழிக்க வருகிறார்கள் பலர். இப்பொழுது தோற்றால், போயே போச்சு! அப்புறம் சமீபத்தில் தலை தூக்குவதென்பதே முடியாது. அதனால், எல்லோரும் தங்களுடைய வாழ்க்கை அந்தஸ்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும்' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார் அவர்.

ஜெர்மனியில் வரட்சி

அதற்கென்ன அர்த்தம் தெரியுமா? ஜெர்மனி இவ்வளவு காலமாக தான் பிடித்த நாடுகளில் இருந்தெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு போய், ஜெர்மனியில் கொட்டிக் கொண்டிருந்தது. பிடிபட்ட நாட்டவர்கள் எல்லாம் அரை வயிறு, கால் வயிறு என்று தவிக்கின்றனர். கிரேக்க மக்கள் பட்டினியால் சாகும் நிலைமையை அடையவில்லையா? நேச தேசக்கப்பல்கள் விசேஷ அநுமதியோடு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லவில்லையா? அந்த உணவுப் பொருள்களிலும் ஒரு பகுதியை நாஸிகள் பருந்துகள்போல் அபகரிக்கவில்லையா? இப்பொழுது அம்மாதிரி சுரண்டுவதற்கு வகை இல்லாதிருக்கிறது போலிருக்கிறது. ராணுவத் தேவை அதிகமாயிருக்கலாம். இன்னொன்று திருடிய பொருள்களை ஜெர்மனிக்குச் சுமந்து வர இருந்த வசதிகள் குறைந்திருக்கலாம். ஆகவே ஜெர்மனியிலும் சீக்கிரமே வரட்சி ஏற்படப் போகிறது என்பதை இந்தத் துரை பேச்சு எடுத்துக் காட்டுகிறது. அதோடு, வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி என்று வந்தால் தானே ஒரு மதிப்பு என்பார்கள், அதேபோல, கொப்பல்ஸ் துரை வாயால் ஜெர்மனிக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட வேண்டுமானால், ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கிற ஆபத்து கொஞ்சநஞ்சமல்ல என்று முடிவு கட்டலாம். எப்பொழுதும் வெற்றிப் பிரதாபமே பாடிய ஒருவருக்கு, இம்மாதிரி அலங்கோலப் படலத்தையும் பாடவேண்டியிருப்பது கஷ்டமாகத் தானே இருக்கும்! ஆனால் எவ்வளவு காலந்தான் உண்மையை மறைத்து வைத்திருக்க முடியும்?

தராசுத் தட்டு தடுமாறியது

கொப்பல்ஸ் மட்டுமல்ல; ஹிட்லரும் ஒரு அழுகை அழுதாகிவிட்டது. 'தராசுத் தட்டு தடுமாறிப் போய்விட்டது; அதைச் சிரமப்பட்டு சரிப்படுத்த வேண்டும்' என்கிறார் அவர். ஜெர்மனியிலே ஆயுத உற்பத்திசாலை முதலாளிகளையெல்லாம் அழைத்து வைத்துக் கொண்டு, இம்மாதிரி பாடியிருக்கிறார் அவர். தலைக்கு மேல் வெள்ளம் ஓடும்படியான நிலைமை வந்து விட்டது. எப்படியாவது தப்பமாட்டோமா என்று எண்ணுவது எல்லோருக்கும் இயற்கை தானே?

ஜெர்மனியை நெருங்கிக் கொண்டிருக்கும் ஆபத்து சாதாரண ஆபத்தல்ல! பேராபத்திலும் பேராபத்து! ஆபத்திலே இதைவிடப் பெரிதாக ஒரு உருப்படி உண்டு என்றால், அதே ஜெர்மனியைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது என்றுகூடச் சொல்லலாம்.

அமெரிக்கர்களிடம் தனி அபிமானம்

இதோ நார்மண்டியைப் பாருங்கள். ஜெர்மானியர் கடுமையாக எதிர்க்கத் தான் எதிர்க்கிறார்கள். அமெரிக்கர்களிடம் அவர்களுக்கு ஒரு தனி அபிமானம் இருக்கிறாற் போலிருக்கிறது. அவர்களுடைய அழகையும், ஆயுதங்களையும் பார்த்துக்கொண்டேயிருக்க அவர்களுக்கு ஆசையாக இருக்கிறாற் போலிருக்கிறது. ஆகவே, அமெரிக்கர்களோடு எங்குமே அவர்கள் ரொம்பக் கடுமையாகவே போராடி வருகிறார்கள். லா ஹே என்ற இடம் மட்டும் ஜெர்மானியர், அமெரிக்கர் ஆகிய இருவரிடை பல தடவை கைமாறிற்று. கடைசியிலே, அது அமெரிக்கர் வசமாகி விட்டது. ஏக நஷ்டத்துடன் அங்கிருந்து நாஸிகள் பின் வாங்கியிருக்கின்றனர். இன்னொரு பக்கத்தில் கேய்ன் என்ற முக்யமான நகரத்தை பிரிட்டிஷ், கனடியத் துருப்புகள் நொறுக்கின. கடைசியாக சென்ற ஞாயிறன்று அந்த நகரமும் நேச தேச வசமாகிவிட்டது. இது ஒரு முக்யமான நகரம். இது போனது ஜெர்மானியருக்குக் கடுமையான நஷ்டம். இந்த நகரம் ஒரே பாழாகி கிடக்கிறதாம். முரட்டு மண்வாரி யந்திரங்கள் இந்த ஊரில் புகுந்து டாங்கிகளுக்கு வழி செய்து கொண்டிருக்கின்றனவாம். முப்பது மணி நேரம் பிசாசுகள் போல் நாஸிகள் இங்கு நின்று கடைசி காலத்தில் போராடியிருக்கிறார்கள். ஏகப் பிணக் குவியலைப் போட்டு விட்டு, கடைசியில் போயிருக்கிறார்கள்.

தோல்வியாக ஆக ஆத்திரம்

இப்பொழுது, சென்ற திங்கட்கிழமை பிரிட்டிஷ் துருப்புகள் கேய்னுக்கு தென் மேற்கே ஒரு புதுத் தாக்குதலை ஆரம்பித்து விட்டார்கள். இது தடையின்றி நடந்து கொண்டிருக்கிறதாம். இன்னொரு இடத்தில் நாஸிகள் ஏமாற்றமடைந்து ஆத்திரங் கொண்டு, சமுத்திரத்தை உடைத்து விட்டு விட்டார்களாம். அவர்களுக்குத் தோல்வி வந்து குவியக் குவிய ஆத்திரமும் அதிகமாகிறது. ஆளில்லா விமானங்களை கண் மூக்குத தெரியாமல் இங்கிலாந்து மீது அனுப்புகிறார்கள். லண்டனில் இதனால் பெருஞ்சேத மேற்பட்டிருக்கிறது. குழந்தைகளும் பெண்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். பல கட்டிடங்கள் பாழாகியிருக்கின்றன.



மத்திய கிழக்குப் போர்முனைக்குச் சமீபத்தில் விஜயம் செய்த வைசிராய் பாதுகாப்புக் கௌன்சில் அங்கத்தினர்கள். தேசியப் போர்முனை (தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தலைவர்) ராவ் பகதூர் என். சிவராஜ் இடது பக்கக் கடைசியிலிருக்கிறார்.

ஆனால், இதனால் எல்லாம் ஹிட்லர் சீமையை ஜெயிக்கவோ, நார்மண்டியில் ஆரம்பிக்கப் பெற்ற படையெடுப்பைத் தடுத்து நிறுத்தவோ முடியாது என்பது உலகறிந்த விஷயம். வெறும் சலசலப்பு இதெல்லாம். சர்ச்சில் தான் பச்சையாகச் சொல்லிவிட்டாரே! 'லண்டனில் ஆரம்பிக்கப் பெற்றது இந்த யுத்தம் லண்டனிலிருந்து கொண்டே இந்த யுத்தத்திற்கு முடிவையும் காண்போம். இங்கிருந்து பிரிட்டிஷ் சர்க்கார் அசையாது!' என்று கூறி யிருக்கிறார் அவர். ஹிட்லருக்கு செவிட்டிலே ஒரு அறை கொடுப்பதை விட ஒஸ்தியா இல்லையா இது?

அதர்ம ராக்ஷஸ முறை.

வேறு ஒன்றும் செய்ய ஹிட்லரால் ஆகவில்லை; அதனால் தான் இந்த அதர்ம ராக்ஷஸ யுத்த முறையை அவர் கையாண்டிருக்கிறார் என்றே நினைக்கத் தோன்றுகிறது. குழந்தைகளையும், குட்டிகளையும், பெண்களையும், பேதையரையும் கொல்லுவதால் ஒரு நாட்டை ஜெயிக்க முடியுமா?

நேச தேசத்தவர்கள் ஜெர்மனியின் யுத்த யந்திரத்திற்குத் தீனிபோடும் ஜெர்மானிய தொழிற்சாலைகளைப் பொடியாக்கத் திட்டம் போட்டு, அதிலே வெற்றியும் பெற்றனர். ஹிட்லருடைய யுத்த யந்திரம் சரியான தீனி இல்லாது இப்பொழுது தடுமாறுகிறது. அதனுடைய பூர்வ பலம் இப்பொழுது இல்லை.

அவர் திட்டம் என்ன?

ஆனால், ஹிட்லர் பிரிட்டனின் யுத்த பலத்தை அடக்கவே திட்டம் போடவில்லை. அப்படிப் போட்டிருந்தால், இந்தியாவில் எழிலொரு பாகமே உள்ள பிரிட்டிஷ் தீவுகளில் ஆங்காங்கே உள்ள உற்பத்தி சாலைகள் மீது அவரது விமானங்கள் படையெடுத்திருக்குமே! அப்படி அவை படையெடுத்ததாகவே தெரியவில்லை. தென் கிழக்கு இங்கிலாந்து ஒன்றே தொடர்ந்து செய்திகளில் அடிபடுகிறது. அங்கு சில தொழிற்சாலைகளிருக்கலாம். ஐரோப்பா மீது படையெடுக்கும் விமானங்களுக்கு நிலையங்களிருக்கலாம். ஐரோப்பாவிற்குச் செல்லும் கப்பல்கள் தங்க சில துறைமுகங்கள் இருக்கலாம். அதெல்லாம் ஹிட்லருக்கு அவ்வளவு அவசியமல்ல என்று தோன்றுகிறது. இந்தப் பிரதேசத்தில் உள்ள லண்டன் மாநகரைத் தரைமட்டமாக்கிப் பார்த்து விடவேண்டும் என்று ஒரு பைசாச எண்ணத்தைக் கொண்டிருக்கிறார் போலிருக்கிறது. லண்டன் அழிக்கப்பட்டால், பிரிட்டிஷ் சர்க்கார் வேறெங்காவது ஓடும்; அது அந்த சர்க்காருக்கு அவமானம்; சர்ச்சிலுக்கும் அவமானம். இவை நிகழ்ந்தால் போதும் என்று ஹிட்லர் கருதுகிறார் போலும். அதனால் தான் தொடர்ந்து, தொடர்ந்து லண்டனையே ஜெர்மன் விமானங்கள் குறியாகக் கொள்ளுகின்றன என்று தோன்றுகிறது. இதைப் போன்ற மடத்தனமான எண்ணம் வேறெதுவுமே இல்லை.

பிரிட்டிஷ் சர்க்காரோ, சர்ச்சிலோ அவ்வளவு எளிதில் மசியப் போகிறவர்கள் அல்ல. ஹிட்லரின் எண்ணத்தை நன்கறிந்தவர்கள் போல, அவர்கள் நாஸித் தாக்குதலைச் சமாளித்துக் கொண்டு, தம்முடைய பலத்தையும் பெருக்கிக் கொண்டு அமெரிக்காவின் உதவியோடு, சரித்திரத்திலேயே கண்டும், கேட்டும் இராத இரண்டாவது போர் முனைத் தாக்குதலை ஆரம்பிக்கச் செய்து விட்டனர். அது திட்டப்படியே. வெற்றிகளோடு தொடர்ந்து நடந்து வருகிறது.

இன்னொரு ருஜூ

வேறு எதும் செய்ய ஹிட்லரால் ஆகவில்லை என்று சொன்னோமே, அதற்கு இன்னொரு ருஜூ. ஹிட்லர் தமது நீர்மூழ்கிப் படைகளின் பலத்தைப் பற்றிப் பிரமாதமாகப் பேசிக் கொண்டிருந்தார். அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் அந்த நீர் மூழ்கிகளும் சில காலம் தர்பார் நடத்தின. சேதமும் நிறைய இருந்தது. அவ்வளவுக்கவ்வளவு பிரிட்டிஷ், அமெரிக்க ஆத்திரம் அதிகரித்தது. நீர்மூழ்கிகளின் தொல்லைகளைச் சமாளிக்க கடும் முறைகளை அனுஷ்டிக்கலாயினர். இப்பொழுது அமெரிக்கக் கப்பல்கள் நிர்ப்பயமாக, நேராகவே பிரான்ஸில் படைகளையும், ஆயுதங்களையும் கொண்டு இறக்குகின்றன என்றால், நாஸி நீர்மூழ்கிகளின் கொட்டம் பூரணமாக அடக்கப்பட்டு விட்டது என்று அர்த்தமில்லையா?

அனுப்பாதது ஏன்?

இதோடு, ஆயிரக் கணக்கான கப்பல்கள் பிரான்ஸிற்கு வருகின்றன என்று ஜெர்மன் விமானிகள் வேவு பார்த்துச் செல்வதும், ஜெர்மன் செய்தியாளர் அச்செய்தியைப் பரப்புவதும் பத்திரிகைகள் மூலம் வெளியாகின்றன. அவ்வாறு வேவு பார்த்தவர்கள், தங்கள் நீர்மூழ்கிகளையோ, வெடி வீசும் விமானங்களையோ, பருந்துப் பாய்ச்சல் விமானங்களையோ அனுப்பி, ஒரு கை பார்க்கச் சொல்லலாமல்லவா?

என்ன செய்யமுடியும்?

அவ்வாறு அவர்கள் செய்யவே முயலவில்லை. என்? அது தான் முன்பே சொல்லி யிருக்கிறோமே. சட்டியிலிருந்தால் அகப்பையில் தானாக வருமென்று! அது தான் இதற்குப் பதில். நீர் மூழ்கிகள் பதுங்கு மிடங்களை எல்லாம் தான் நேச தேச விமானிகள் விடாது தாக்கி வந்திருக்கிறார்களே! அதோடு, கடற்கரைப் பாதுகாப்பு விமானங்கள் வெகு உஷாராக இரவு பகலாகக் காவல் காத்திருக்கின்றன. கடற்கண்ணி அகற்றும் கப்பல்கள் வேறு குறுக்கும் நெடுக்குமாகப் போய்க்கொண்டிருந்திருக்கின்றன. என்ன செய்ய முடியும் அந்த நாஸி நீர்மூழ்கிகள் இத்தனை பந்தோபஸ்துகளுக் கிடையில்?

ராணுவ பலத்தால் இனி நேச தேச முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தமுடியாது என்றுணர்ந்த ஹிட்லர், ரகசிய ஆயுதங்களையும், பயங்கர ஆயுதங்களையும் உற்பத்தி செய்கிறவர்களது மூளைகளில் நம்பிக்கை வைத்திருக்கிறார். அவரது சொந்த மூளை தான் இப்போதைக்கு வேலை செய்ய முடியாது அநேகமாக ஸ்தம்பித்துப் போயிருக்க வேண்டுமே!

ருஷ்யாவைப் பாருங்கள்!

இதோ, ருஷ்யாவைப் பாருங்கள். உலகமே பிரமிக்கிறது ருஷ்யர்கள் முன்னேறும் வேகத்தைப் பார்த்து! மின்ஸ்க் என்ற இடத்தில் மட்டும் இருபத்தெட்டாயிரம் நாஸிப் பிணங்களைப் போட்டு விட்டு, ஜெர்மானியர் ஓடி யிருக்கிறார்கள். பதினொரு நாட்களில் 240 மைல்கள் முன்னேறினார்கள் போன வாரத்தில். ஆறுந்

(11-ம் பக்கம் பார்க்க)



ஜூன் மாதம் 6-ந் தேதி நார்மண்டி கரையைத் தாக்கக் கிளம்பிய பிரிட்டிஷ் விமானப் படை ஆயத்தமாயிருக்கிறது.



கப்பலிலிருந்து கரையில் டாங்கிகள் இறக்கப்படுகின்றன. டாங்கிகளுக்குள் தண்ணீர் புகமுடியாதபடி அமைக்கப்பட்டுள்ள சாதனங்களைக் காண்க.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

பொழுது ஐரோப்பிய மேற்கு கரையில் ஆரம்பித்து விட்டது. நேச நாட்டினர் ஹிட்லரின் மேற்குக் கோட்டையைத் தகர்த்து உட்புகுந்து ஊன்றிக் கொண்டனர். இனி நாம் ஹிட்லரின் நாளை எண்ணிக் கொண் ருக்க வே ண்டியது தான். எதிர் நோக்கி இருக்கும் சமாதான காலத்திலும் இந்த ஆயுத உதவியுள்ள தோழமைத்தனம் நீடித்திருந்து வர வேண்டும்.

நல்ல சகுனம்.

சென்ற வருடக் கடைசியில் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா நாடுகளில் அந்நிய (நாட்டு) மந்திரிகள் மாஸ்கோவில் மகா நாடு கூடி எதிர் கால ஐரோப்பாவைப் பற்றி ஆலோசித்தது நல்ல சகுனமாகும். அரசியல் நோக்கத்திலாகட்டும், பாவனையிலாகட்டும், நடவடிக்கைகளிலாகட்டும், வித்திய ச மிருப்பினும் நான் கண்டமட்டில், மீரட் சதி வழக்கின் நடவடிக்கையின் பொருட்டாக நமக்கு இ பொழுது நடக்கும் பொது உடமைக் கொள்கையில் வித்தியாச மிருக்கத்தான் செய்யும்.

உலக சமாதானத்திற்கு உத்திரவாதம்.

ஆனால் பொருளாதார முறையில் மிகத் திறமையாக எந்தப் பெரிய அரசாங்கமும் தீர்க்காத வகையில் சோவியத் அரசாங்கத்தார் தீர்த்துள்ளார்கள். உலகத்தில் பெரிய வல்லரசுகள் ஒன்று சேர்ந்து ஒத்துழைப்பது உலக சமாதானத்திற்குப் பெரிய உத்தரவாதமாகும். பல சமூகத்தார்கள் ஒரே நோக்கத்துடன் கொண்ட ரஷ்ய சிவப்பு பட்டாளம் பிரமிக்கத் தக்க விதமாக பெரும் காரியத்தைச் சாதித்திருக்கிறது. அதனால் நமது நேசநாட்டினரின் பொதுநோக்கமான யுத்தத்தில் வெற்றி அல்ல உலக சமாதானம் ஏற்படுத்துவதில் வெற்றி காணுவதிலும், உலகில் நீடித்திருக்கும் சமாதானமும், உலகில் நிரந்தர ஒழுங்கும் ஏற்பட உதவும் என சிவப்புப் படையை கோருகிறேன்.

மகத்தான தியாகம் செய்த செம்படை ஜெர்மானியரை கிழக்கில் இழுத்திருக்கா விட்டால் ரெத்தவெறியும் திமிரும் கொண்ட ஜெர்மானியர், உலக நாகரிகத்தையே அழித்து பழைய காட்டு மிராண்டித் தனமான வல்லான் வகுத்ததே சட்டம் என்ற கொள்கைக்கு வந்திருப்பர்.

வீர ரஷ்யரின் புகழ்.

வீர ரஷ்யா மக்கள் தாங்கள் பல ஜாதி பல கொள்கையினராக இருந்தும் தாய் நாட்டைக் காப்பதிலும் பொது விரோதியை விரட்டுவதிலும் ஒரு சொல்படி நடந்து உலகம் மெச்சும் வகையில் புகழ் அடைந்துள்ளனர். அடிக்கடி நேசநாட்டினர் சகல உதவியும் செய்து வந்தது அவரை அதிகமாக உற்சாகப் படுத்தியது. இப்பொழுது நேசநாட்டினர் அவர்களுடன் 20 வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துள்ளனர். இடிவிழினும் உழையாத ரஷ்யரின் ஒத்துழைப்பு நமக்கு இன்றியமையாததாகும். அதற்கு கிடைத்த தலைவர் ஸ்டாலின் வானம் இடிந்து விழினும் ஒன்றும் பிரமாதமல்லை எனக் கூறும் சுபாவமுடையவர். மனோதிடமும் சமயோஜித புத்தியும் நிரம்ப பெற்றவர். ரஷ்யாவுக்கு வந்த இழுக்கானல் எது வரினும் வருக. விடாது தாக்குங்கள் என்று உத்திரவிட்ட ஸ்டாலின் குரல் எல்லா ரஷ்ய மக்களையும் திடம்பெறச் செய்து ஸ்டாலின்கிராடை மீட்டு இழந்த பிரதேசத்தை பிடுங்கிக் கொண்டு இனி ஜெர்மானியர்களின் கொத்தளங்களைத் தட்டும் தன்மை வந்துவிட்டது. நேசதேசத்தினரின் வெற்றி வெகு சமீபத்தில் வந்துவிட்டது.

—திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்தில் சமீபத்தில் ஒலிபரப்பப் பட்ட பிரசங்கம்.

(10-ம் பக்கம் தொடர்ச்சி)

தேதியன்று, 'வில்னு என்ற முக்கியமான நக த்திற்கு 45 மைல் தூ த்தில் இருக்கிறார்கள் ருஷ்யர்கள்' என்ற செய்தி வந்தது. எட்டாந் தேதி காலை 'வில்னு வீழ்ந்து விட்டது. அந்நகருக்கு அப்பாலும் செஞ்சேனை நாஸிகளைத் துரத்திக் கொண்டு ஓடுகிறது' என்ற தகவல் வருகிறது.

வேகமாக ஓடுவது யார் ?

இப்பொழுது வேகமாக ஓடுவது யார் என்றே தீர்மானிக்க முடியாது போலிருக்கிறதே ! நாஸிகள் அவ்வளவு வேகமாகப் பின் வாங்கி ஓடுகிறார்களா? அல்லது ருஷ்யர்கள் தான் அவ்வளவு வேகமாக முன்னே போகிறார்களா தெரியவில்லை. இரண்டு தினங்களுக்கு முன் வந்த செய்திப்படி, ருஷ்யப் படைகள் லட்வியா என்ற நாட்டிற்குள் புகுந்து, விசிறிபோல் பரந்து போய்க் கொண்டிருக்கின்றன என்றும், ஒரு படை ஒரு நாளில் 32 மைல்கள் போயிருக்கிறது என்றும், மாஜி லித்வேனியா என்ற சிறு நாட்டின் தலை நகரான கோவ்னோவிற்கு 40 மைல் தூரத்தில் ஒரு படை இருக்கிறதென்றும், அங்கிருந்து அசல் ஜெர்மனியின் எல்லை வெகு சமீபம் தானென்றும் தெரிகிறது.

மற்ற நேசதேசப் படைகளை விட, ருஷ்யப் படை ஜெர்மனியின் எல்லையை முதலில் அடைந்து விடும் என்றே தோன்றுகிறது.

நடக்காது !

இத்தாலியிலும், நார்மண்டியிலும் நேசப் படைகளின் முன்னேற்றத்தை அரும்பாடுபட்டு நாஸிகள் நிறுத்த முயலுகிறார்கள். அது நடக்கப் போகிற காரியமல்ல. ஆனால், ஐஸன்ஹோவர் சொன்னது மாதிரி, ஐரோப்பாவில் ஒவ்வொரு அங்குலத்தை மீட்பதற்கும் பிரமாதமாகப் போராட வேண்டி யிருக்கும். பெரும் நஷ்டத்தைச் சமாளிக்கவேண்டியிருக்கும். ஆனால் வெற்றி கிடைப்பதென்னமோ நிச்சயம். ஹிட்லரும், அவரது சகாக்களும் ஒழியப் போவதும் திண்ணம். ஐரோப்பா நாஸ ஸத்திலிருந்து கட்டாயம் விடுபடும்.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

ஜூலை 5.—ஹிட்லர் தன் உத்தியோகஸ்தர்களோடு கலந்து பேசினர்.

ஜூலை 6.—பறக்கும் குண்டுகள் பற்றி மிஸ்டர் சர்ச்சில் ஒரு அறிக்கை விடுத்தார்.

மேற்கு ஐரோப்பியப் போர் முனையின் ஜெர்மன் படைத் தலைவரான பீல்ட் மார்ஷல் வான்ரன் ஸ்டெடுக்குப் பதிலாக பீல்ட் மார்ஷல் வான் க்ளுக் பதவி ஏற்றார்.

ஜூலை 8.—நேற்றிரவு பெர்லின் நகரத்தின் மீது நேச நாட்டு வெடி குண்டு விமானங்கள் வீசிய குண்டுகளினால் 114 ஜெர்மன் விமானங்கள் நாச மாயின.

ஜெர்மன் நாடு மகா ஆபத்தான நிலைமையி லிருக்கின்ற தென்று டாக்டர் கொப்பல்ஸ் தன் பிரசங்க மொன்றில் குறிப்பிட்டார்.

ஜூலை 9.—ஜெர்மன் பறக்கும் வெடி குண்டுகளோடு போரிட்டபோது, பிரிட்டிஷ் உள் நாட்டுப் பாதுகாப்புப் படையினர் பம்பரம் போல் சுழன்று சுழன்று தம் கடமைகளை நிறைவேற்றினர்க ளென்று பிரிட்டிஷ் உள் நாட்டு மந்திரி மிஸ்டர் ஹெர்பெர்ட் மாரிசன் குறிப்பிட்டார்.

ஜூலை 10.—பறக்கும் வெடி குண்டுகளைக் குறித்து ஜெனரல் அய்சினேவர் ஒரு அறிக்கை விடுத்தார்.

ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பற் போராட்டத்தைக் குறித்து மிஸ்டர் சர்ச்சிலும் மிஸ்டர் ரூஸ்வெல்டும் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டனர்.

ஜூலை 11.—இனி நடை பெறவேண்டிய வேலையைக் குறித்து ஜெனரல் அய்சினேவர் ஒரு அறிக்கை விடுத்தார்.

அமெரிக்காவும், அட்லாண்டிக்கும்.

ஜூலை 7.—ஜெர்மனியின் பீரங்கி பலத்தை விட நான்கு மடங்கு அதிக பீரங்கி பலத்தை அமெரிக்காவும் பிரிட்டனும் அமைத்துக் கொண்டிருக்கின்றன வென்று அமெரிக்க ஆக்டிங் யுத்த மந்திரி மிஸ்டர் ராபர்ட் ஆர். பாட்டர்ஸன் கூறினர்.

ஜூலை 11.—இன்று பத்திரிகைக்காரர்களிடம், தான் மீண்டும் 4-வது முறையாக தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டால், அதை ஒப்புகொள்ளுவதாக மிஸ்டர் ரூஸ்வெல்ட் அறிவித்தார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஜூலை 5.—உக்ருலைச் சுற்றி ஆங்காங்கே போராட்டம் நடை பெற்றது.

அட்மிரல் மௌண்ட் பாட்டன் அஸ்ஸாம் பர்மா போர் முனைக்கு விஜயம் செய்ததாகத் தெரிகிறது.

ஜூலை 6.—சிருஹி, ஷாங்யேல், ராங்சன் ஆகிய இடங்களி லிருந்து ஜப்பானியர்கள் பின் வாங்கினர்கள்.

ஜூலை 7.—உக்ருலின் வடக் கெல்லையில் ஜப்பானியர் இன்னும் இருந்து கொண்டு கடுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜூலை 8.—பலேலுக்குக் கிழக்கே எதிரிகள் ஆர்ப்பாட்டம் அதிகமா யிருக்கிறது.

ஜூலை 9.—ஷோர்பங், ப்ரேயடிமெய், நகடான் ஆகிய இடங்களை விட்டு ஜப்பானியர் ஓடி விட்டனர்.

ஜூலை 10.—உக்ருலில் ஜப்பானியர்கள் எதிர்ப்பு ஒடுங்கி விட்டதென்று சொல்லலாம்.

ஜூலை 11.—ஏளக்ஷினை நேசப்படைகள் கைப்பற்றின.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

ஜூலை 5.—மெலோடெக்னோவை செம் படைகள் கைப் பற்றின.

ஜூலை 6.— கோவெல், ரகோப் என்னுமிடங்களை ரஷ்யப் படைகள் கைப் பற்றின.

ஜூலை 7.—வில்னவை நோக்கி செம் படைகள் முன்னேறுகின்றன.

ஜூலை 8.—பரனேவிச்சி, லையுப்கா, கரோடிஷி, முதலிய 150 இடங்களை சோவியத் படைகள் கைப் பற்றின.

ஜூலை 9.—லிடாவை செம் படைகள் கைப்பற்றின. பால்டிக் நாடுகளின் மீட்சி ஆரம்பமானது; லிதுவேனியாவில் பல நகரங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 10.—லுனினெட்ஸ், ஸ்லோனின், பிட்னரன்டா ஆகிய இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

ஜூலை 11.—லட்வியா எல்லைக்குள் செம் படைகள் புகுந்து விட்டன.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

ஜூலை 6.—பளாரென்சுக்குப் போகும் பாதையில் மிகவும் பயங்கரமான தோர் நிலைமையை 8-ம் படை உண்டாக்கி விட்டது.

ஜூலை 7.—ரோசினுானேவில் மூன்றில் இரண்டு பங்கு பாகத்தை 5-ம் படை கைப்பற்றிக் கொண்டது.

ஜூலை 8.—ரோசினுானேவையும், காஸ்டெல்லினவையும், நேசநாட்டுப் படைகள் கைப்பற்றின.

சமீபத்தில் மத்தியதரைக் கடலிலும் ஏஜியன் கடலிலும் ரோந்துபோன பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல்கள் 11 எதிரிக் கப்பல்களை மூழ்கடித்துவிட்டன.

ஜூலை 9.—வால்டெராவை நேசப்படைகள் கைப்பற்றின.

ஜூலை 10.—மிஸ்டர் சர்ச்சிலையும் இராணுவத் தலைவர்களையும் கலந்து பேசும் பொருட்டு, சமீபத்தில் ஜெனரல் அலெக்ஸாண்டர் பிரிட்டனிக்குப் போயிருந்தாரென்று தெரிகிறது.

இத்தாலிய அரசாங்கம் மீண்டும் ரோமாபுரிக்கு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி வயப்பட்ட நாடுகள்.

ஜூலை 5.—லா ஹேய் டு புட்ஸுக்குள் அமெரிக்கப் படைகள் நுழைந்தன.

ஜூலை 6.—சொபூர்க் பகுதியில் அமெரிக்கப் படைகள் மூன்று கிராமங்களைக் கைப்பற்றின.

ஜூலை 7.—அமெரிக்கப் படைகள் அயர் என்னுமிடத்தைக் கைப்பற்றின.

ஜெனரல் டி கால் வாஷிங்டன் வந்து சேர்ந்தார்.

ஜூலை 8.—ஹிரோவில்லா, க்ரூச்சி, புரோன் என்னும் மூன்று கிராமங்களை பிரிட்டிஷ் படைகளும், சென்ட்ஜீனை அமெரிக்கப் படைகளும் கைப்பற்றின.

ஜூலை 9.—கெய்னையும் லா ஹே டு புட்ஸையும் நேசப்படைகள் கைப்பற்றின.

ஜூலை 10.—பிரிட்டிவில்லா, சுர்ஓடான், மெஸ்னில் ஆகியவற்றை பிரிட்டிஷ் படைகளும், சென்ட் எனியை அமெரிக்கப் படைகளும் கைப்பற்றின.

தான் மிஸ்டர் ரூஸ்வெல்டோடு கலந்து பேசியதுபற்றி ஜெனரல் டி கால் ஒரு அறிக்கை விடுத்தார்.

ஜூலை 11.—லோவிக்னி, ஹர்ட்வெர்னி லாமெஸ்னி அங்காட் ஆகிய இடங்களை நேசப்படைகள் கைப்பற்றின.

தூரக் கிழக்கு நாடுகள்.

ஜூலை 5.—அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் 17 ஜப்பானியக் கப்பல்களை மூழ்கடித்ததாக அமெரிக்கக் கப்பற்படை மந்திரி அறிவித்தார். பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல்கள் 9 எதிரி கப்பல்களை மூழ்கடித்தன.

ஜூலை 6.—நயம்பூரிலுள்ள கோரன் சேரான் விமானக் கூடத்தை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 7.—நயம்பூருக்கு அப்பாலுள்ள மானிம் தீவை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின.

ஹூனன், ஹோனன் போர்முனைகளில் ஜப்பானியப் படைகள் பின்வாங்கத் தலைப்பட்டுவிட்டன.

ஜூலை 9.—செய்பான் முழுதும் கைப்பற்றப்பட்டது.

ஜூலை 11.—மிஸ்டர் ரூஸ்வெல்டும் மிஸ்டர் வாலெசும் வாஷிங்டனில் 2 மணி நேரம் கலந்து பேசினர்கள்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.